www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

முதலாம் தவணைப் பரீட்சை - 2021

# Conducted by Field Work Centre, Thondaimanaru.

# 1st Term Examination - 2021

FWC

**இந்துசமயம்**
**Hinduism**

Three Hours | Gr -12 (2022) | 42 | T | I,II

(மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்)

## பகுதி I

- **1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று எதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது பொருந்தாததைத் தெரிவு செய்க.**

01) 1. அபௌருஷேயம் 2. எழுதாமறை 3. சுயம்பு 4. ஆகமம் 5. சுருதி

02) 1. காரணம் 2. மகுடம் 3. தீப்தம் 4. காமிகம் 5. சுக்கிரநீதி

03) 1. மகேந்திரவர்மன் 2. நிம்பக்கர் 3. மாமல்லன் 4. நந்திவர்மன் 5. பரமேஸ்வரவர்மன்

04) 1. அப்பர் 2. சம்பந்தர் 3. மாணிக்கவாசகர் 4. காரைக்காலம்மையார் 5. அருணகிரிநாதர்

05) 1. சிவபுராணம் 2. விஷ்புராணம் 3. பிரமபுராணம் 4. சூரியபுராணம் 5. பெரியபுராணம்

- **06 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடி சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை பொருந்தாத அச்சோடிச்சொல்லைத் தெரிவு செய்க.**

06) 1. சம்பந்தர் - திருவிசைப்பா
2. அப்பர் - திருத்தாண்டகம்
3. காரைக்காலம்மையார் - அற்புதத்திருவந்தாதி
4. மணிவாசகர் - திருவாசகம்
5. சுந்தரர் - திருத்தொண்டத்தொகை

07) 1. கர்ணம் - ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தைப் பண்படுத்தல்.
2. நித்தியகிரியை - தினமும் நடைபெறுவது.
3. கொடிமரம் - பசுவைக்குறித்து நிற்பது
4. பிரதிஷ்டை - ஆலயங்களில் திருவுருவங்களை நிலைநிறுத்துவது.
5. சிலப்பதிகாரம் - கிரியைகளின் குற்ற நிவர்த்தியின் பொருட்டு ஆற்றப்படுவது.

08) 1. சிவபுராணம் - பத்து
2. விஷ்ணு புராணம் - நான்கு
3. அக்கினி புராணம் - ஒன்று
4. சூரிய புராணம் - இரண்டு
5. பிரம புராணம் - இரண்டு



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

09) 1. பெரியபுராணம் - சேக்கிழார்
2. திருவருட்பயன் - உமாபதி சிவாச்சாரியார்
3. சகலகலாவல்லிமாலை - குமரகுருபரர்
4. கந்தரனுபூதி - கச்சியப்பசிவச்சாரியார்
5. அபிராமி அந்தாதி - அபிராமிப்பட்டர்

10) 1. குறிஞ்சி - முருகன்
2. முல்லை - திருமால்
3. மருதம் - சிவன்
4. நெய்தல் - வருணன்
5. பாலை - கொற்றவை

- **11 தொடக்கம் 13 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 'அ' 'ஆ' என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலுக்கு ஏற்ற விதத்தில் 'ஆ' நிரல் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவு செய்க.**

**11)**

| அ | ஆ |
|---|---|
| 1. வருணன் | A அக்கினி |
| 2. தேவதூதன் | B அந்தணர் |
| 3. வேட்டல் | C ரிதசயகோவா |
| 4. சுக்கிலயசூர் | D பகவான் |
| 5. இந்திரன் | E சதருத்திரியம் |

1. CAEDB 2. BCAED 3. CABED 4. CADBE 5. EDBAC

**12)**

| அ | ஆ |
|---|---|
| 1. ஒப்பிலாமணிப்புலவர் | A இராமாயணம் |
| 2. வான்மீகி | B பஞ்சலக்கணம் |
| 3. மனுவந்தரம் | C சிவரகசியம் |
| 4. இராஜதர்மம் | D வேதம் |
| 5. வியாசர் | E மகாபாரதம் |

1. CAEDB 2. CABED 3. ABDEC 4. CADBE 5. BCDEA

**13)**

| அ | ஆ |
|---|---|
| 1. இராஜஇராஜசோழன் | A குடைவரைக்கோயில் |
| 2. மகேந்திரவர்மன் | B. விஷ்ணுசித்தீயம் |
| 3. கிருஷ்ணதேவராஜர் | C. தஞ்சை பெருவுடையார் |
| 4. சமுத்திரகுப்தன் | D கங்கைகொண்ட சோழேஸ்வரம் |
| 5. இராஜேந்திரசோழன் | E அசுவமேதயாகம் |

1. CABED 2. CADBE 3. DEBAL 4. ACDBE 5. BDCEA

- **14 தொடக்கம் 17 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.**

14) சிந்து நதி பாயும் பகுதி அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதி.
1) 3250 – 2750 2) 3250 – 1930 3) 1922 – 1930
4) 2750 – 1930 5) 3250 – 1922

15) பிரபஞ்ச உற்பத்தி, பிரபஞ்சப் படைப்பின் மூலாதாரம் பற்றிய விடயங்கள் காணப்படும் இருக்குவேத சூக்தம்.
1) புருஷசூக்தம் 2) நாஸதீய சூக்தம் 3) வருண சூக்தம்
4) யம சூக்தம் 5) முனி சூக்தம்



agaram.lk

16) கிருஷ்ண அவதாரத்தினை வெளிப்படுத்தும் தத்துவ இலக்கியமாகவும், யோக நூலாகவும் கூறப்படுவது.
1) மகாபாரதம் 2) பகவத்கீதை 3) இராமாயணம்
4) சிவரகசியம் 5) தர்மசாத்திரம்

17) புராணங்களில் சிவபரத்துவத்தை வெளிப்படுத்தி நிற்கும் பகுதி.
1) பிரகலாதன்கதை 2) மார்க்கண்டேயர் கதை 3) அடிமுடிதேடிய கதை
4) பாகவத புராண அவதாரம் 5) துர்க்கை மகிடாசுரனை அழித்தமை

- **மேல்வரும் பகுதியில் A தொடக்கம் 5 வரையில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டவொருவிடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 18 தொடக்கம் 22 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.**

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>பட்டர்பிரான் | B<br>சனாதனதர்மம் | C<br>தஞ்சை மாவட்டம் | D<br>சிவபாதசேகரன் | E<br>வேந்தன் |
| F<br>நடராஜா சின்னம் | G<br>மாயோன் | H<br>திருப்பல்லாண்டு | I<br>அன்பேசிவம் | J<br>குருஞான சம்பந்தர் |

18) இந்துநாகரிகத்தின் சிறப்பம்சங்களுடன் தொடர்புடைய தொகுதி.
1. GB 2. AI 3. IG 4. BD 5. BI

19) பெரியாழ்வாருடன் தொடர்புடைய தொகுதி.
1. AI 2. AH 3. HG 4. BA 5. HI

20) தர்மபுர ஆதினத்துடன் தொடர்புடைய தொகுதி.
1. CI 2. CH 3. CA 4. BI 5. HJ

21) சங்ககால வழிபாட்டு தெய்வங்களைக் குறிக்கும் சேர்மானம்.
1. EA 2. GH 3. EG 4. EJ 5. GI

22) சோழர்கால மன்னனுடன் தொடர்புடைய சேர்மானம்.
1. FE 2. AE 3. GE 4. DF 5. DE

- ***23 தொடக்கம் 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.***

23) இராமாயணம்.
1. இதிகாசங்களில் ஒன்றான இராமாயணம் வான் மீகியால் எழுதப்பட்டது.
2. இதனை தமிழில் துளசிதாசர் எழுதினார்.
3. இராமபிரானை காவியத்தலைவனாக கொண்டு பாடப்பட்டது.
4. இராமாயணம் 24,000 சுலோகங்களை உடையது.
5. ஏழு காண்டங்களை உடையது.

24) சோழர் அரசும் சைவநெறியும்
1. அரசசபையிலும் அளவைக்கருவிகளிலும் நடராஜசின்னம் பொறிக்கப்பட்டிருந்தது.
2. ஆலய பரிபாலனத்திற்காக தேவரடியார், ரிஷபத்தனியினர் நிமிக்கப்பட்டனர்.
3. திருமுறைகள் தொகுக்கப்பட்டு பண்ணுடன் பாடப்பட்டன.
4. சோழர்காலத்தில் அம்மன்வழிபாடு குடுமியா மலையில் இடம்பெற்றது.
5. வணிகர்கள் திருமுக்கூடலில் சைவப்பணிகளில் ஈடுபட்டனர்.

25) சைவசமயத்தின் சிறப்பம்சம்.
1. பரந்த நோக்குடையது.
2. சனாதன தர்மம் என போற்றப்படுகின்றது.
3. பிறமதக்கருத்துக்களை எற்றுக்கொள்ளும் தன்மையுடையது.
4. வேற்றுமையை வலியுறுத்துவது.
5. வாழ்க்கை வாழ்வதற்கே என்ற அடிப்படையில் அமைந்தது.

(25x2=50 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

## பகுதி II

**பகுதி I இலிருந்துஇரண்டு வினாக்களையும், பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி I

01) சிந்துவெளி நாகரிக காலத்தில் நிலவிய சமயம்.

இந்துசமயயச் சார்புடையது என்பதனை மேல் வரும் காரணிகளின் அடிப்படையில் ஆராய்க.

அ) சிவவழிபாடு ஆ) கலைகள் இ) சமய நம்பிக்கை

(4 + 3 + 3 = 10 புள்ளிகள்)

02) வேதகால இந்து நாகரிகத்தின் சிறப்பினை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

அ) சமயவழிபாடு ஆ) தேவர்கள் இ) தத்துவ சிந்தனை

(4 + 3 + 3 = 10 புள்ளிகள்)

03) திருக்கோயிற் பண்பாட்டினை வளம்படுத்துவதில் சிவாகமங்கள் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புகளில் எழுதுக.

அ) ஆகமம் என்பதன் பொருள் விளக்கம்

ஆ) கிரியைகள்

இ) நுண்கலைகள்

(3 + 4 + 3 = 10 புள்ளிகள்)

## பகுதி II

04) இந்துசமய நூல்கள் என்ற வகையிற் புராணங்கள் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக?

(10 புள்ளிகள்)

05) விஜயநகர காலத்துச் சமய நிலைகளை விளக்குக. (10 புள்ளிகள்)

06) இந்துசமய இக்கியங்களில் மகாபாரதம் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

07) நாயன்மார்கள் வரிசையில் "சுந்தர மூர்த்தி நாயனார்" பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

(10 புள்ளிகள்)

08) திருவாவடுதுறை ஆதீனத்தின் தோற்றம் பணிகள் பற்றி விபரிக்குக? (10 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!